ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2255/17 - 2021 නොවැම්බර් මස 24 වැනි බදාදා - 2021.11.24

2255/17 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு புதிய கலவான நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் தொலஹேன 100 கன மீற்றருடைய நீர் சேகரிப்புத் தாங்கியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப் பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல.: DVP/02/04/RN/301

நீர் வழங்கல் அமைச்சு,
“லக்திய மெதுர”,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2021, நவெம்பர் 22.

1A - G 35414 - 43 (2021/11)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

இரத்தினபுரி மாவட்டம், கலவான பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 196 கலவான மேற்கு கிராம அலுவலர் பிரிவில் தொலஹேன கிராமத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திட்ட உருவரையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள தொலஹேன கட்டி கரன என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து 11.7 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : துண்டு திட்டப்படத்தின் உட்செல்லும் பாதை.

கிழக்கு : துண்டு திட்டப்படத்தின் உட்செல்லும் பாதை.

தெற்கு : துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள வெற்றுக் காணி.

மேற்கு : துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள வெற்றுக் காணி.

உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்: திருமதி கே. டீ. நயனிகா நிலங்கி குமாரகே,
தொலஹேன மேற்கு,
கலவான.

12 - 104

---

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு கலவான புதிய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப் பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல.: DVP/02/04/RN/302

நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, “லக்திய மெதுர”,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2021, நவெம்பர் 22.

**அட்டவணை**

இரத்தினபுரி மாவட்டம், கலவான பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 197/B கொஸ்வத்த கிராம அலுவலர் பிரிவில் வரதெல்கொட கிராமத்தில் அமைந்துள்ள இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு. யூ. கே. எஸ். பீ. விஜேசிங்ஹ அவர்களினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் R/KLW/2017/787 மற்றும் 2017.11.15 ஆந் திகதிய திட்டப்படத்தின் துண்டு இலக்கம் ஏ என சுட்டிக்காட்டப் பட்டுள்ள குலநெஹேன என்றழைக்கப்படுகின்ற காணியிலிருந்து 0.7035 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : துண்டு இல. 2A (இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி) மற்றும் துண்டு இல. 154.

கிழக்கு : துண்டு இல. 154, 2A (இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி) மற்றும் துண்டு இல. 2G.

தெற்கு : துண்டு இல. 2G மற்றும் 2A (இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி).

மேற்கு : துண்டு இல. 2A (இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி).

உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்: கண்டறிய முடியவில்லை.

12 - 105

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு புதிய கலவான நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் வேவெல்கதுர நீர் சேகரிப்பு தாங்கியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை எடுத்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப் பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல.: DVP/02/04/RN/304

நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, “லக்திய மெதுர”,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2021, நவெம்பர் 22.

**அட்டவணை**

இரத்தினபுரி மாவட்டம், கலவான பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 196/A வேவெல்கதுர கிராம அலுவலர் பிரிவில் வேவெல்கதுர கிராமத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திட்ட உருவரையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள ஹோர்டன் வத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து 10 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : தேயிலைப் பயிர்ச்செய்கை.

கிழக்கு : தேயிலைப் பயிர்ச்செய்கை.

தெற்கு : தேயிலைப் பயிர்ச்செய்கை.

மேற்கு : தேயிலைப் பயிர்ச்செய்கை.

உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்: திரு. பிரியன்த
ஹோர்டன் வத்த ,
கலவான.

12 - 106

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.